
ஒன்ராறியோ இந்துசமயப் பேரவை
HINDU RELIGIOUS SOCIETY OF ONTARIO



# ஒன்ராறியோ
# இந்து சமயப் பேரவையின்
# 10 ஆண்டுகாலப் பொது அறிக்கை



# ஒன்ராறியோ இந்து சமயப் பேரவையின் 10 ஆண்டுகாலப் பொது அறிக்கை

1994 யூலை மாதம் கனடாவில் நடைபெற்ற சைவசித்தாந்த மகாநாட்டில் இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் சைவத்தமிழர்கள் வாழும் மற்றும் பலநாடுகளிலிருந்தும் பல சைவப் பேரறிஞர்கள் கலந்து கொண்டனர். இலங்கையில் இருந்து ஆத்மீகவள்ளல் நா. முத்தையா அவர்கள் வருகை தந்திருந்தார். அவர் புலம்பெயர்ந்து வாழும் சைவத்தமிழ் மக்கள் தங்கள் சமயம் மொழி, கலாச்சாரம், பண்பாடு ஆகியனவற்றைத் தொடர்ந்து பேண வேண்டுமென்பதில் பெரும் ஆர்வம் உள்ளவர். தன்வருகையால் கனடாவில் சைவத்தமிழ் மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென விரும்பினார். தன் வாழ்நாள் முழுவதும் ஆன்மீக வாழ்வு வாழ்ந்து அளப்பரிய சேவை செய்த பெரியார் பக்குவம் மிக்க ஒரு ஞானி. கனடாவில் அவர் தங்கியிருந்த வீட்டில் தாயகத்தில் அவர் செய்த பணிகளால் ஈர்க்கப்பட்ட ஏழுபேர்கொண்ட குழு அவரைச் சந்திக்கச் சென்றிருந்தது. குழுவினர் யாவரையும் ஒருங்கிணைத்து கூட்டிச் சென்ற சிவ. முத்துலிங்கத்தின் அழைப்பை ஏற்று 1994ம் ஆண்டு யூலை 3ம் திகதி அவருடைய வீட்டில் கூட்டு வழிபாட்டுக்காக பெரியார் அவர்கள் வருகை தந்திருந்தார். கூட்டு வழிபாட்டில் சுமார் 45 பேர் பங்கு கொண்டனர். கூட்டுவழிபாடு முடிய கலந்துரையாடிக் கொண்டிருந்தபொழுது கனடாவில் சமயநெறி தமிழ்மொழி பண்பாடு, கலாச்சாரத்தைப் பேணுவதற்காக ஒரு நிறுவனம் வேண்டும் என்று வழிபாட்டில் கலந்துகொண்ட பலரும் ஒரே குரலில் கூறினர். அதற்குக் காரணம் பெரியார் அவர்கள் வழிபாட்டின் பின்பு ஆற்றிய அருளுரையில் கூறிய

கருத்துக்களின் பிரதிபலிப்பேயாகும். ஆத்மீக வள்ளல் அவர்கள் யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவைக்கு அதேகாலத்தில் தலைவராக இருந்தமையால் கனடாவிலும் இந்து சமயப் பேரவை ஒன்றை அமைப்பதெனவும் யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவைக்கு உறுதுணையாக இருந்து செயற்படு வதெனவும் தீர்மானிக்கப்பட்டது. அன்றைய இந்து சமயப் பேரவையின் அங்குரார்ப்ணக்கூட்டம் இனிது நடைபெற்றது. தலைவராக திரு நவரத்தினம் பரராஜசிங்கம் அவர்களும், பொதுச் செயலாளராக அடியார் விபுலானந்தர் அவர்களும் பொருளாளராக சிவ.முத்துலிங்கம் அவர்களும் உபதலைவராக சுப்பையா குமாரசுவாமி அவர்களும் இணைச் செயலாளராக சுந்தரம் குமாரசுவாமி அவர்களும் உதவிச் செயலாளர்களாக கனகசபாபதி தனபாலசிங்கம், வடிவேலு ஞானகாந்தன் ஆகியோரும் உபதனாதிகாரியாக சதாசிவம் சுந்தரலிங்கம் அவர்களும் நிர்வாக சபை உறுப்பினர்களாக செல்லத்துரை சோமசுந்தரம் ஆசிரியர், தம்பிராசா நடராசா, திருமதி கணேசன் விஜயலட்சுமி, செல்வி பிருந்தா தம்பிராசா, செல்வி மனோகரி நல்லதம்பி, பத்மநாதன் சிவபாதம் செல்லப்பா சுந்தரலிங்கம், திருமதி கருணாநிதி தனபாலசிங்கம் ஆகியோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். மேற்படி நிறுவனத்தின் காப்பாளர்களாக ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள், கவிஞர் வி. கந்தவனம், சாமி அப்பாத்துரை, திரு. ச. திருநடராசா, திருமதி சரஸ்வதி கணேஸ்வரன் ஆகியோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்படடனர். இரு கிழமைகளுக்குப் பின்பு தொடர்ந்து நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் கா. கனகரத்தினம் அவர்கள் உப தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

தாபகர் ஆத்மஜோதி ஐயா அவர்கள் தன் வாழ்க்கையில் தனக்குக் கிடைத்த பெரிய பேறு இளம் வயது தொடக்கம் செய்த மகான்களின் தரிசனந்தான் எனத் தன் அருளுரையில் கண்ணீர் ததும்பக் கூறியிருந்தார். ரமணமகரிஷி பகவான் சாயிபாபா சுவாமி சுத்தானந்தர், சுவாமி சிவானந்தர் ஆகியோருடன் தனக்கு எப்படித் தொடர்பு ஏற்பட்டதென்பதையும் அவர்களின் அருட்பிரவாகம் எப்படிப் கிடைத்தது என்பதையும் விளக்கமாகக் கூறியிருந்தார். மனமுருகக் கேட்ட சபையோர்

அந்த அனுபவங்களை ஒரு புத்தகமாக எழுதித் தருமாறு மிகப் பணிவன்புடன் கேட்டிருந்தனர். சபையோர் கேட்டுக் கொண்டபடி தன்வாழ்நாளில் தரிசித்த மகான்களில் 10 பேரைத் தெரிந்தெடுத்து 10 நாட்களில் எழுதித் தந்திருந்தார். ஞானதபோதனரான ஐயா அவர்கள் திருவருள் சக்தியினால் எழுதிய அந்தப் புத்தகம் விலைமதிக்க முடியாத நூலாகும். அன்றைய தினம் உதயமான பேரவையின் செயல்திட்டங்களும் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகசபையினரால் வகுக்கப்பட்டது. அவை பின்வருமாறு:

1. ஈழத்திலே பாதிக்கப்பட்ட அகதிகள், அநாதைப் பிள்ளைகளுக்கு உதவி செய்தல்.
2. யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் கிளைநிறுவனமாக இயங்கிய சைவச்சிறுவர் இல்லத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருத்தல்.
3. கனடாவில் உள்ள சைவத்தமிழ்ச் சிறார்களுக்குத் தமிழையும் சமயத்தையும் கற்பித்தல்.
4. வீடுகள் தோறும் கூட்டு வழிபாடு செய்தல்.
5 இந்து கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் விழாக்கள் நடாத்துதல். சமயகுரவர்கள், நாவலர் பெருமான், சிவயோகசுவாமி ஆகியோரின் குருபூசைகளை வருடந்தோறும் நடத்துதல்.
6. இந்து சமயம் சார்ந்த நூல்களை வெளியிடுதல்.
7. அனாதரவற்ற முதியோர்களுக்கு ஆதரவளித்தல்.
8. தியானப் பயிற்சி, யோகாசனப் பயிற்சி நடத்துதல்.
9. இந்து கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் தியான மண்டபம், நூல்நிலையம் என்பன அமைத்தல்.
10. சமயசேவை செய்வதற்குத் தொண்டர்குழு அமைத்தல்.

நிர்வாகசபையினர் தொடர்ந்து கலந்துரையாடும்பொழுது ஆத்மீக வள்ளல் அவர்களின் ஆத்மீக சேவையைப் பாராட்டி விழா ஒன்று நடத்துவது எனவும் வரலாற்று ஏடுகளில் பதியப்படவேண்டுமென்பதற்காக விழாமலர் ஒன்றும் வெளியிடப்படவேண்டுமெனவும் தீர்மானித்தனர். ஆகஸ்ட் மாதம் முதல் முத்தையா சுவாமிகள் ஐரோப்பிய நாடுகள், இந்தோனேசியா ஆகியனவற்றுக்கு சுற்றுப்பயணம் செய்ய வேண்டியிருந்ததால் யூலை மாதம் 30ம் திகதியே பாராட்டுவிழா

நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. விழாமலரில் முக்கியமாகச் சுவாமிகள் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள் இடம்பெற வேண்டுமென்பதால் அந்தப் பணியை சிவ. முத்துலிங்கம் அவர்களிடம் நிர்வாகசபை கையளித்தது. வாழ்க்கைக் குறிப்புக்குத் தேவையான தகவல்களை பெரியார் அவர்களிடம் சேகரித்த சிவ முத்துலிங்கம் அதைத் தரமிக்க கட்டுரையாக்குவதற்காக பேரவையின் காப்பாளர் கவிஞர் கந்தவனம் அவர்களின் உதவியை நாடினார். வாழ்க்கைக் குறிப்பைத் தரமான கட்டுரையாக்கிய ஆசிரியர் கந்தவனம் அவர்கள் தன் மகத்தான தொண்டின் மூலமும் சேவையின் மூலமும் ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வையே திசைதிருப்பிய ஒரு பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை, பல ஞானிகளின் சகவாசத்தாலும், ஆத்மீக சாதனையாலும் தன்னை ஒரு பக்குவப்பட்ட ஞானியாக்கிய ஒரு ஞானதபோதனரை சில குறிப்புக்கள் அடங்கிய கட்டுரைக்குள் அடக்கலாமா எனக் கேட்டார். செவிமடுத்த சிவமுத்துலிங்கம் பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதித்தர முடியுமா என ஆசிரியர் அவர்களை கேட்க ஆசிரியர் அவர்களும் மனமுவந்து அந்தப் பணியை ஏற்றுக் கொண்டார்.

யூலை மாதம் 30ம் திகதி ஆத்மஜோதி ஐயாவின் பாராட்டு விழா மிகவும் விமரிசையாக மண்டபம் கொள்ளாத மக்களுக்கு மத்தியில் நடைபெற்றது. சுவாமிகளுக்கு மலர்க்கிரீடம் சூட்டி மலர்களினால் அலங்கரிக்கப்பட்ட மலர்ப்பந்தலில் அமர்த்தப்பட்டார். சுவாமிகள் மலர்ப்பந்தலில் 5 மணித்தியாலங்கள் தன் அருளுரை ஆரம்பிக்குமளவும் பத்மாசனத்தில் ஆடாமல், அசையாமல் வீற்றிருந்தார். பத்மாசனத்தில் அவர் இருந்த நிலை அவர் பெரும் ஆத்மீக சாதனையாளன் என்பதனை எடுத்துக் காட்டியது. அன்றையதினம் பெரியாருக்குக் காலஞ்சென்ற முன்னாள் கல்விப்பணிப்பாளர் திரு. மாணிக்கவாசகர் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். கவிஞர் கந்தவனம் அவர்கள் **ஞானசுரபி** என்ற பட்டம் அளித்துக் கௌரவித்து வாழ்த்துமடல் ஒன்றையும் கையளித்தார். அத்துடன் பெரியாரின் வாழ்க்கை வரலாற்று நூலை மிக விரைவில் எழுதிக் கையளிப்பேன் எனவும் உறுதியளித்தார். சுவாமிகள் அவர்கள்

அருளுரை வழங்கும்பொழுது நகைச்சுவையாக "என்னிடம் இருக்கும் சரக்கை இறக்கி வைக்க இருப்பிடம் இல்லையென்று நினைத்தேன். இறக்கிவைக்க இருப்பிடம் கிடைத்தமையை நினைந்து பெருமகிழ்வு எய்துகின்றேன். கனடாவாழ் தமிழ் மக்கள் தங்கள் அன்பினால் என்னை பிணைத்து விட்டார்கள். தங்கள் அன்பு உள்ளம் என்றென்றும் என்நெஞ்சத்தை விட்டு அகலாது. வரலாறு காணாத விழா எடுத்ததற்கு இந்து சமயப் பேரவைக்கு நன்றி கூறுகிறேன். ஒவ்வொருவரும் ஆன்மீக வாழ்வு வாழ்ந்தால் சகல துன்பங்களிலும் இருந்து விடுபட்டு நற்கதியை அடையலாம்" என்பன போன்ற அற்புதமான வாசகங்களை மக்களுக்கு எடுத்தியம்பி தன் அருளுரையைப் பூர்த்தி செய்தார்.

விழா முடிந்து இரு நாட்களில் நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் பெரியார் எழுதிக்கையளித்த தரிசனம் என்ற நூலையும், கவிஞர் கந்தவனம் அவர்கள் எழுதிக்கொண்டிருந்த பெரியாரின் வரலாற்று நூலையும் மிக விரைவில் அச்சிடுவித்து 1995ம் ஆண்டு அவரின் முன்னிலையில் வெளியிடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. 1995ம் ஆண்டு கோடை காலத்தில் பெரியார் அவர்கள் கனடாவிற்கு வருகை தர வேண்டுமெனவும் அன்புக்கோரிக்கை விடப்பட்டது. நிர்வாக சபைக்கூட்டத்திற்கு சமூகம் கொடுத்திருந்த பெரியார் எங்கள் அன்புக் கோரிக்கையை ஏற்றுத் திரும்பவும் இங்கே வருகை தருவேன் என உறுதியளித்தார்.

தொடர்ந்து நடத்தப்பட்ட நிர்வாக சபைக் கூட்டங்களில் பரந்துபட்ட ரீதியில் பொதுமக்களுக்கு அறிவித்தல் கொடுத்து பொதுக்கூட்டம் நடத்தி சமயத் தமிழ்க் கல்வி கற்பிப்பதற்கு தமிழ் ஆசிரியர்களை தேர்ந்தெடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி 1995ம் ஆண்டு பகிரங்கக்கூட்டம் நடத்தி பேரவையின் காப்பாளர் கவிஞர் கந்தவனம் அவர்களின் தலைமையின் கீழ் 42 ஆசிரியர்கள் சமயத்தமிழ்க் கல்வி கற்பிப்பதற்கு தங்கள் பெயர்களை பதிவுசெய்தனர். பேரவையில் முரண்பாடுகளை வளர்த்துப் பிரிந்துபோன முக்கிய பதவி வகித்த நபர் ஒருவர் அந்த ஆவணங்களைக் கொண்டு சென்று இன்னொரு நிறுவனத்திற்கு தமிழ் சமயவகுப்புக்களை நடத்துவதற்கு உபயோகித்தார். பேரவையின் நன்மதிப்பைப் பேண

வேண்டுமென்பதற்காகக் குறிப்பிட்ட நபரில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வாரந்தோறும் கூட்டுவழிபாடு நடத்தப்பட வேண்டுமென்ற பேரவையின் தீர்மானத்தின்படி Kennedy/Progress இல் இருந்த பேரவையின் பொருளாளர் சிவ முத்துலிங்கத்தின் warehouse இல் வரவேற்பாளர் அறையில் வாரந்தோறும் கூட்டுவழிபாடு நடத்தப்பட்டது.

1995ம் ஆண்டு இந்து சமயப் பேரவையின் தாபகர் திரும்பவும் கனடாவிற்கு வருகை தந்தார். Kennedy / passmore இல் அமைந்திருந்த கனடாக் கந்தசாமி ஆலயத்தில் சிவயோக சுவாமிகளின் வருடாந்த ஆயிலிய குருபூசை நடத்தப்பட்டது. ஆலய மண்டபம் நிறைந்த மக்கள் குருபூசையில் கலந்து கொண்டனர். பேரவையின் தாபகர் ஆத்மீக வள்ளல் ஆத்மஜோதி முத்தையா அவர்கள் குருபூசையை முன்னிட்டு நடைபெற்ற விழாவிற்கு தலைமை தாங்கினார். 1995ம் ஆண்டு மேற்படி ஆலயத்தில் சமயகுரவர்கள் நாவலர் பெருமானின் குருபூசைகளும் பேரவையினரால் நடத்தப்பட்டது. ஆத்மஜோதி ஐயா இங்கே தங்கியிருந்த காலத்தில் பலவீட்டு வழிபாடுகளை நிகழ்த்தியிருந்தார். அதனால் கனடாவாழ் மக்களுக்கு மத்தியில் ஆன்மீக சிந்தனையும் சமய எழுச்சியும் ஏற்பட்டன. பெரியார் அவர்களினால் அந்தர்யோகம் நிகழ்ச்சியும் அவர் இங்கே தங்கியிருந்த ஆண்டுகளில் நடத்தப்பட்டது. 1994ம் ஆண்டு மூன்று மணித்தியாலம் நடத்தப்பட்ட நிகழ்ச்சியில் 120 ஆர்வலர்களும், 1995ம் ஆண்டு ஏழு மணித்தியாலம் நிகழ்த்தப்பட்ட நிகழ்ச்சியில் 150 ஆர்வலர்களும் பங்கு பற்றினர். 1995ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 4ம் திகதி ஆன்மீகவள்ளல் எழுதிய தரிசனம் என்ற நூலும் அவரைப் பற்றிக் கவிஞர் கந்தவனம் அவர்கள் எழுதிய முத்தான தொண்டர் என்ற வாழ்க்கை வரலாற்று நூலும் வெளியிடப்பட்டன. பேரவையின் காப்பாளர்களில் ஒருவரான சாமி அப்பாத்துரையின் தலைமையின் கீழ் நடைபெற்ற நூல்வெளியீட்டு விழாவில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர். ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் ரொறன்ரோவில் கலந்துகொண்ட இறுதி நிகழ்ச்சி இதுவாகும். சுவாமிகள் அவர்கள் நூல் வெளியீட்டு விழாவில் அருளுரை நிகழ்த்தும் பொழுது தன்னை ஒரு குறுகிய

வட்டத்திற்குள் அமர்த்த முடியாது எனவும், தமிழ் கூறும் நல்லுலகம் யாவுக்கும் தான் சொந்தமானவர் என்றும் தன்னால் முடிந்தளவிற்கு தமிழ் மக்களுக்கு மத்தியில் சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதுதான் தன்னுடைய நோக்கமும் தலையாய கடமையும் ஆகும் என்றும் கூறினார்.

செப்ரெம்பர் 8ம் திகதி மொன்றியல் துர்க்கை அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற மகாகும்பாபிசேக நிகழ்ச்சியில் கலந்துகொள்ள செப்ரெம்பர் 6ம்திகதி ரொறன்ரோவில் இருந்து புறப்பட்ட ஆத்மஜோதி சுவாமிகள் 8ம் திகதி காலை ஒன்பதுமணி அளவில் இறைவனடி சேர்ந்தார். சுவாமிகளின் பூதவுடலை ரொறன்ரோவுக்கு வரவழைத்த இந்துசமயப் பேரவையினர் மூன்று நாட்கள் Funeral Home இல் பொதுமக்களின் பார்வைக்கு வைத்து மறுநாள் வரலாறுகாணாத நிலையில் Donmills/Steel சந்தியில் இருந்து ஊர்வலமாக Highland Memorial Gardens மயானத்திற்கு ஊர்வலமாகக் கொண்டு சென்று இறுதிக் கிரியைகளை முறைப்படி செய்து தகனம் செய்தனர். இறுதிக்கிரியைகளின்பொழுது பல ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். பெரியாரின் அந்தியேட்டிக் கிரியைகளும் பேரவையினரால் உரிய முறையில் நடத்தப்பட்டன. பெரியாரின் இறுதி ஊர்வலத்திற்காக ரொறன்ரோ வாழ் தமிழ் மக்கள் செய்த நிதி உதவியில் கிரியைச் செலவுகள் போக மிகுதிப் பணம் 13,000 டொலர்களும் கைதடி சைவச்சிறுவர் இல்லத்திற்கு அனுப்பப்பட்டது. 1994ம் ஆண்டு தொடக்கம் 1998ம் ஆண்டு காலப்பகுதியில் 38,000 கனடிய டொலர்கள் யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவையின் உதவி நிறுவனமாகிய கைதடி சைவச்சிறுவர் இல்லத்திற்கு பேரவையினால் அனுப்பி வைக்கப்பட்டது.

1996ம் ஆண்டு பெரியார் ஞானசுரபி முத்தையா அவர்களின் முதலாவது நினைவு விழா பேரவையின் காப்பாளர்களில் ஒருவரான சாமி அப்பாத்துரை அவர்களின் தலைமையின்கீழ் வெகுசிறப்பாக நடத்தப்பட்டது. பெரியாரின் நினைவாகச் சிறார்களுக்கு மத்தியில் பேச்சுப்போட்டிகள் நடத்தி முதற்பரிசு பெற்றவர்களுக்குத் தங்கப் பதக்கம் பரிசாக வழங்கப்பட்டது. மேற்படி போட்டியில் 250க்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டார்கள். பெரியாரின் நினைவலைகள்

அடங்கிய நினைவு மலரும் வெளியிடப்பட்டது. 1996 கைதடி அநாதை இல்லத்திற்கு டொலர் சீட்டு மூலம் நிதி திரட்டி அனுப்பும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது எனினும் அது வெற்றியளிக்கவில்லை.

1997ம் ஆண்டு சாமி அப்பாத்துரை தலைவராகவும், க. தனபாலசிங்கம் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். 1996ம் ஆண்டு கனடா ஐயப்பன் ஆலயம் மலர்ச்சியுற்று வளரும் காலத்தில் இந்துசமயப் பேரவையும் ஐயப்பன் ஆலய அறங்காவலர் சபையினரும் சேர்ந்து சமயத்தமிழ் வகுப்புக்கள் நடத்துவது என தீர்மானித்தனர். இருபகுதியினரும் பல ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி எடுத்த தீர்மானங்களின்படி பேரவையின் காப்பாளர் சாமி அப்பாத்துரையை அதிபராகக் கொண்டு மேற்படி பாடசாலை நடத்தப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. சாமி அப்பாத்துரை நேரமின்மை காரணமாக மாணிக்கம் ஆசிரியர் அவர்களை ஐயப்பன் ஆலய அறங்காவலர்களின் உதவியோடு அதிபராக்கினார். 150க்கு மேற்பட்ட மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை சிறப்பாக நடத்தப்பட்டது. ஐயப்பன் அறங்காவலரால் நியமிக்கப்பட்ட பாடசாலை நிர்வாகிகளின் வேண்டுகொளின்படி பாடசாலை நடத்தும் உரிமையை அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

1995ம் ஆண்டு கனடா வாழ் தமிழ் மக்கள் மத்தியில் ஆன்மீக நூல் நிலையம் ஒன்று நிறுவப்பட வேண்டுமென்ற பெருநோக்கத்தில் பெரியார் ஆத்மஜோதி முத்தையா அவர்கள் 1995ம் ஆண்டு பேரவையின் உதவிப் பொருளாளராக இருந்த சதாசிவம் சுந்தரலிங்கம் அவர்களின் வீட்டில் நூல்நிலையம் அங்குரார்ப்பணம் செய்தார். 1996ம் ஆண்டு அந்நூல்நிலையம் 3852 Finch Ave 2ம் மாடியில் உள்ள அறையில் நூல் நிலையம் திறக்கப்பட்டு நடத்தப்பட்டது. சில காலத்தின் பின் நூல்நிலையம் இருந்த அறையை விடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால் நூல்நிலையம் மூடப்பட்டது.

1996ம் ஆண்டு 1997ம் ஆண்டுகளில் சமயகுரவர்கள், நாவலர் பெருமான், சிவயோகசுவாமிகள் ஆகியோரின் குருபூசைகள் ஐயப்பன் ஆலயத்தில் நடத்தப்பட்டன. 1998ம் ஆண்டு ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் குருபூசை உட்பட

மேற்படி குருபூசைகள் கனடாக்கந்தசாமி ஆலயத்தில் நடத்தப்பட்டன. 1999ம் ஆண்டு 2000ம் ஆண்டும் மேற்குறிப்பிட்ட குருபூசைகள் கனடாக்கந்தசாமி ஆலயத்தில் நடத்தப்பட்டன. 1999ம் ஆண்டு ஏப்ரெல்மாதம் நடைபெறும் சிவயோகசுவாமிகளின் வருடாந்தக் குருபூசையை முன்னிட்டு கனடாவில் முதன்முதலாக சுவாமிகளின் நற்சிந்தனை முற்றோதல் இந்துசமயப் பேரவையினரால் நடத்தப்பட்டது. காலை 7 மணிதொடக்கம் மாலை 9 மணிவரை நடத்தப்பட்ட நற்சிந்தனை முற்றோதலில் சிவயோகசுவாமிகளின் பல பக்தர்கள் பங்கு பற்றினர். தொடர்ந்து ஆறு வருடமாக சுவாமிகளின் நற்சிந்தனை முற்றோதல் பேரவையினரால் நடத்தப்பட்டு வருகின்றது.

நாவலர் பெருமான் சைவத்திற்கும் தமிழிற்கும் செய்த பணியினை கனடாவாழ் தமிழ்ச்சிறார்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக முழுநாள் விழா ஒன்றை 16-07-1999ம் ஆண்டு வெள்ளிக்கிழமை Lansdowneஇல் அமைந்திருந்த மீனாட்சி அம்மன் ஆலயத்தில் வெகுவிமரிசையாக நடத்தப்பட்டது. காலை 9 மணியில் இருந்து மாலை 9 மணிவரை விழா நடைபெற்றது. கனடாவில் சைவப்பணி, தமிழ்ப்பணி, சமூகப்பணி செய்த பெரியவர்கள் ஐந்துபேர் கௌரவிக்கப்பட்டார்கள். 1999ம் ஆண்டு பேரவையின் நிர்வாகிகளில் ஒருவராக இருந்த திரு ஆ. வேலுப்பிள்ளையின் பெருமுயற்சியினால் மற்றைய நிர்வாகிகளின் ஒத்துழைப்புடன் விழா இனிது நடைபெற்றது. விழாவில் மாணவர்களுக்கு மத்தியில் சமய சம்பந்தமான வினாவிடை ரீதியில் பரீட்சை நடத்தப்பட்டது. பங்கு பற்றியோர் அனைவருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. சிறார்களின் பட்டிமண்டபமும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

புலம்பெயர்ந்து தமிழர்கள் வாழும் நாடுகளில் திருமுறைகள் பேணப்பட வேண்டும், சிறார்கள் சைவ வாழ்வு வாழ வேண்டுமென்ற பேரவையின் தாபகர் ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் பேர் ஆவலைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் 19-08-1999இல் திருமுறை விழா 1940 எல்ஸ்மெயர் வீதியில் அமைந்திருந்த கனடாக் கந்தசாமி கோயிலில் நடத்தப்பட்டது. விழாவில் ஆத்மஜோதி சுவாமிகள் எழுதிய திருமுறைக்கதைகள் என்ற புத்தகமும்

வெளியிடப்பட்டது. கனடாவிற்கு வருகைதந்திருந்த பிரபல சொற்பொழிவாளராகிய அருள்மொழி அரசி திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். இவ்விழாவில் திரு. ச. திருநடராசா அவர்களின் மணிவிழாவும் கொண்டாடப்பட்டது.

1998ம் ஆண்டுதொடக்கம் இந்துசமயப் பேரவை சார்பில் பேரவையின் உதவிச் செயலாளர் சிவ முத்துலிங்கம் அவர்களின் ஒருங்கிணைப்பில் திருவாசகம் முற்றோதல் பல ஆலயங்களில் நடத்தப்பட்டன. நாளடைவில் திருவாசகம் முற்றோதிய சிவனடியார்கள் ஒரு திருக்கூட்டமாக பரிணமித்தனர்.

2000ம் ஆண்டில் பல திருவாசக முற்றோதல்கள் நடத்தப்பட்டன. இவ்வாண்டு தலைவர் திரு. சாமி அப்பாத்துரை ஒன்ராறியோ கல்விச்சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதையொட்டி திரு. கா. கனகரத்தினம் தலைமையில் பாராட்டுக் கூட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது. இதே ஆண்டு தாபகர் ஆத்மஜோதி ஐயாவின் ஐந்தாவது நினைவு விழாவும் கொண்டாடப்பட்டது. சித்திரைச் சதயத்தில் நடத்தப்பட்ட திருநாவுக்கரசர் குருபூசையில் தேவார முதலிகளாகிய சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோரின் தேவாரங்கள் முற்றோதப்பட வேண்டுமென்ற கோரிக்கையை பேரறிஞர் முருகவே பரமநாதனும் வித்துவான் கு.வி.மகாலிங்கமும் முன்வைத்தனர். பெரியார்களின் ஆலோசனையின்படி நடத்தப்பட்ட தேவாரமுற்றோதல், வாரம் தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் கனடாக் கந்தசாமி கோயிலில் நடத்தப்பட்டது. திருஞானசம்பந்தர் குருபூசையின்பொழுது பேரறிஞர் முருகவே பரமநாதன் அவர்கள் உரையாற்றுகையில் இறைவன் திருவருளால் இந்து சமயப் பேரவையின் சார்பில் சிவ முத்துலிங்கத்தின் ஒருங்கிணைப்பில் திருமுறை முற்றோதல் இவ் ஆலயத்தில் நடத்தப்பட்டுவருகின்றது எனக் கூறினார். நாங்கள் தேவாரம் முற்றோதல் தானே நடத்தி வருகின்றோம் நீங்கள் திருமுறை முற்றோதல் இங்கே நடைபெறுகின்றது என்று கூறினீர்களே என்று சிவமுத்துலிங்கம் கேட்டதற்கு நானோ சொன்னேன் எம்பெருமான் சொல்லவைத்தான் என்று தன்னை மறந்து சொன்னார். இறைவாக்காக பெரியவர் கூறிய கூற்றை செயல்படுத்த முனைந்து உடனடியாக இந்தியாவில் இருந்து திருமுறைப் புத்தகங்களை வரவழைத்து தேவார முற்றோதல்

திருமுறை முற்றோதலாக பரிணமித்தது. தொடர்ந்து பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8:30 மணிதொடக்கம் மாலை 4 மணிவரை திருமுறை முற்றோதல் பக்தி சிரத்தையுடன் நடத்தப்பட்டது.

10-03-2000 வெள்ளிக்கிழமை மாலை ரொறன்ரோ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் பெரியார் ஆத்மஜோதி முத்தையா அவர்கள் எழுதிய பன்னிருமாத நினைவுகள் என்ற நூல் வெளியிடப்பட்டது. 21-05-2000 ஞாயிற்றுக்கிழமை துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பவளவிழா ஆண்டை முன்னிட்டு அன்னையின் பவளவிழா ரொறன்ரோ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் வெகுவிமரிசையாக நடத்தப்பட்டது. விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருந்த செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார். அன்னையினால் நடத்தப்படும் சைவ நூல் காப்பகத்திற்கு பேரவையினரால் நிதி உதவியும் வழங்கப்பட்டது.

1948ம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் நாவலப்பிட்டியில் ஆத்மஜோதி நிலையம் சார்பில் ஆசிரியர் ஆத்மஜோதி முத்தையா அவர்களை ஆசிரியராக கொண்டு வெளியிடப்பட்ட ஆத்மஜோதி தமிழ்கூறும் நல் உலகம் எல்லாம் பெரும் வரவேற்பை பெற்று வெளிவந்தது. 1983ம் ஆண்டு நடைபெற்ற இனக் கலவரத்தினால் ஆத்மஜோதி நிலையமும், அச்சுக்கூடமும் பெறுமதிமிக்க ஆயிரக்கணக்கான நூல்களும் ஆவணங்களும் தீக்கிரையாக்கப்பட்டன. கனடாவில் 1991ம் ஆண்டு 1995ம் ஆண்டு காலப்பகுதியில் ஆத்மஜோதி முத்தையா அவர்களின் சீடர்களில் ஒருவரான வடிவேலு ஞானகாந்தன் அவர்களின் பெருமுயற்சியினால் தனிப்பட்ட முறையில் வெளியிடப்பட்டது. பெரியார் ஆத்மஜோதி முத்தையா அவர்கள் இங்கு தங்கியிருந்த காலத்தில் இந்துசமயப் பேரவை பொறுப்பெடுத்து ஆத்மஜோதியை தொடர்ந்துவெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொண்ட அன்புக்கட்டளை இந்துசமயப் பேரவை நிர்வாகிகளின் நெஞ்சத்தில் நிறைந்திருந்தது. 2000ம் ஆண்டு மார்ச் மாதம் பேரவையின் பொருளாளர் செ. சோமசுந்தரம் ஆசிரியரின் வீட்டில் நிர்வாகசபை கூடியபொழுது ஆத்மஜோதி சஞ்சிகையை வெளியிட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

கவிஞர் கந்தவனம் அவர்களை பிரதம ஆசிரியராகவும் சிவமுத்துலிங்கம், திரு நடராசா ஆகியோரை உதவி ஆசிரியராகவும் தெரிவு செய்தது. ஆத்மஜோதியின் தாபகர் ஆத்மீக வள்ளல் முத்தையா அவர்களின் பிறந்தநாளான வைகாசி விசாகத்தில் வெளியிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. பேரவையின் தீர்மானத்தின்படி வைகாசி விசாகத்தை முன்னிட்டு 11-06-2000 ஆண்டு கனடாக் கந்தசாமி ஆலயத்தில் வெளியிடப்பட்டது. ரொறன்ரோவை அடுத்து தமிழ் மக்கள் கூடுதலாக வாழும் மொன்றியல் மாநகரத்திலும் ஆத்மஜோதி சஞ்சிகையின் அறிமுகவெளியீடு 28-07-2000 வெள்ளிக்கிழமை மொன்றியல் அருள்மிகு முருகன் ஆலயத்திலும் நடத்தப்பட்டது. 'ஆத்மஜோதி' காலாண்டுச் சஞ்சிகையாக 2000 பிரதிகள் அச்சிடப்பட்டு இலவசமாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

ஈழத்தமிழர் கனடாவில் மேற்கொண்டுவரும் சைவசமய முயற்சியை மதிப்பீடு செய்து கனடாவில் சைவசமயம் என்ற நூலை பேரவையின் காப்பாளர் கவிஞர் கந்தவனம் அவர்கள் எழுதினார். அந்நூல் 01-10-2000 ஞாயிற்றுக்கிழமை ரொறன்ரோ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் மாலை 6 மணியளவில் பேரவையினரால் வெளியிடப்பட்டது. பெரியார் முருகவே பரமநாதன் அவர்களால் எழுதப்பட்ட ஈழத்து சித்தர் குடைச்சுவாமி என்ற நூல் 22-10-2000 ஞாயிற்றுக்கிழமை கனடாக்கந்தசாமி ஆலயத்தில் வெளியிடப்படடது. முற்றும் துறந்த பூரண சித்தரான குடைச்சுவாமியின் அருள்சக்தியில் அந்நூல் மக்களின் பேர் ஆதரவைப்பெற்றது. பிரபல சட்டத்தரணி யசோ சின்னத்துரை அவர்கள் முதற்பிரதியை பெற்றுக்கொண்டார். பல சைவசமய வேதாந்த நூல்களையும் தமிழ் இலக்கியங்களையும்தன் பெருமுயற்சியினால் கசடறக்கற்ற பெரியவர் முருகவே பரமநாதன் அவர்களுக்கு பேரவையின் காப்பாளர் கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் 'பேரறிஞர்' என்னும் பட்டத்தை சூட்டிக் கௌரவித்தார்.

கனடாக் கந்தசாமி ஆலயத்தில் வாரந்தோறும் திருமுறை முற்றோதல் நடைபெற்றுக் கொண்டிருந்தபொழுது திருமுறைகளின் பெருமையை அதன் மகத்துவத்தை சைவத்தமிழ் மக்கள் அறிய வேண்டுமென்ற எண்ணம் பேரவை நிர்வாகிகளின் மனதில் உதித்தது. எண்ணிய எண்ணத்திற்கு செயல்வடிவம்

கொடுக்கும் வகையில் பெரியவர் முருகவே பரமநாதன் அவர்கள் சைவத்திருமுறைகளின் விழுமியம் என்ற நூலை எழுதிக் கையளித்தார். அந்நூல் 05-11-2000 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பன்னிரு திருமுறை முற்றோதல் பூர்த்தி விழாவில் வெளியிடப்பட்டது. முற்றோதலில் கலந்து கொண்ட சிவனடியார் திருக்கூட்டத்தினருக்கு முருகன் புத்தகசாலை அதிபர் திரு. க. மகேசன் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். செல்லத்தம்பி மார்க்கண்டு அவர்கள் நூலின் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

1998, 1999, 2000ம் ஆண்டுகளில் சமயகுரவர்களின் குருபூசைகளும், நாவலர்பெருமான் சிவயோகசுவாமிகள், பேரவையின் தாபகர் ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் ஆகியோரின் குருபூசைகளும் கனடாக் கந்தசுவாமி ஆலயத்தில் பேரவையினரால் நடத்தப்பட்டன.

2001ம் ஆண்டு பல திருவாசக முற்றோதல்கள், நாகபூசணி அம்பாள் ஆலயத்திலும், அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்திலும் நடத்தப்பட்டன. மேற்கூறப்பட்ட குருபூசைகளும் இவ்விரு ஆலயங்களிலும் நடத்தப்பட்டன. 2001ம் ஆண்டு பன்னிருதிருமுறை முற்றோதல் நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் நடத்துவதற்கு திருவருள் கைகூடியது. தொடர்ந்து ஏப்ரல் மாதம் தொடக்கம் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் திருமுறை முற்றோதல் வெகுசிறப்பாக நடத்தப்பட்டது. சிவனடியார் திருக்கூட்டத்தினருக்கு திருமுறைகளில் பெரும் ஆர்வம் ஏற்பட்டது. செப்ரெம்பர் மாதம் 2001ம் ஆண்டு திருமுறை பூர்த்திவிழா நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் வெகுவிமரிசையாக நடத்தப்பட்டது. பூர்த்தி விழாவின்பொழுது பேரவையின் காப்பாளர் கவிஞர் வி. கந்தவனம் அவர்களின் பெரும் முயற்சியினால் தொகுக்கப்பட்ட தேவைக்கேற்ற திருமுறைத்திரட்டு என்ற நூலும், சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் எழுதிய திருமுறைச்செல்வம் என்ற நூலும் வெளியிடப்பட்டன. திருமுறை ஓதிய அடியார்களுக்கு அருள்பெற்ற நாயன்மார்கள் என்ற உயாந்த நூலைப்பரிசாகக் கொடுத்து முருகன் புத்தகசாலை அதிபர் திரு. க. மகேசன் அவர்கள் கௌரவித்தார். நூல்களின் முதற்பிரதியை பெரியார் செல்லத்தம்பி மார்க்கண்டு அவர்கள் பெற்றுக் கொண்டார்.

குப்பிழான் கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்ட சட்டத்தரணி திரு. கா.ஜெகநாதன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். நாகபூசணி அம்பாள் ஆலய தேவஸ்தானத்தின் சார்பில் திருமுறை ஓதிய சிவனடியார்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

1997ம் ஆண்டு ஐயப்பன் ஆலயத்தில் நடைபெற்ற சிவயோகசுவாமிகளின் குருபூசையின் பொழுது 'சிவயோகசுவாமிகளின் அருள் மொழிகள்' என்ற நூல் பேரவையினரால் வெளியிடப்பட்டது. நாவலர் பெருமான் எழுதிய சைவவினாவிடையைத் தழுவி சைவசமய அடிப்படைத் தத்துவங்களை விளக்கும் நூலாக புதியசைவ வினாவிடை என்ற, பேரவையின் காப்பாளர் கவிஞர் கந்தவனம் அவர்கள் எழுதியநூல் பேரவையினரால் 1997ம் ஆண்டு வெளியிடப்பட்டது. சைவச் சிறார்களுக்குப் பாடநூலாக விளங்கத்தகமை வாய்ந்த நூலாகையால் மிகவிரைவில் தீர்ந்துபோய் விட்டன. பேரவையின் நிதிப்பற்றாக்குறையினால் காலம் தாழ்த்தி 2002ம் ஆண்டு மறுபதிப்புச் செய்யப்பட்டது. பெரியார் ஆத்மஜோதி முத்தையா அவர்களினால் நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையத்தில் தொகுத்து வெளியிடப்பட்ட அர்ச்சனை மாலையை அவர் இறைவனடி சேர்ந்த 31ம் நாள் அபிராமி அச்சகத்தின் உரிமையாளர் தம்பிராசா அவர்கள் இலவசமாக வெளியிட்டார். அந்த வெளியீடு விழாவின் பொழுதே தீர்ந்துவிட்டமையால் 1995ம் ஆண்டுசுவாமிகள் அவர்கள் சிவ முத்துலிங்கம் அவர்களுக்கு அர்ச்னை மாலையில் 2000 பிரதிகளை வெளியிடும்படி பணித்த அன்புக்கட்டளையை ஏற்று 2002ம் ஆண்டு ஆத்மஜோதி சுவாமிகளின் பிறந்தநாளான வைகாசி விசாகத்தில் அன்று 1000 பிரதிகளும் 2003ம் ஆண்டு வைகாசி விசாகத்தின்பொழுது 1000 பிரதிகளும் வெளியிடப்பட்டன. தங்கம்மா நான்மணிமாலை என்ற துாக்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் புகழ்பாடும் கவிதைநூலும் 1997ம் ஆண்டுவெளியிடப்பட்டது. இந்நூலின் ஆசிரியர் கவிஞர் வி. கந்தவனம் ஆவார். 1995ம் ஆண்டு ஆத்மஜோதி சுவாமிகள் கனடாவில் தங்கியிருந்த காலத்தில் திரு கோணேஸ் அவர்களின் ரேடியோ ஏசியா கட்டிடத்தில் நடத்தப்பட்ட முழுநாள் அந்தர்யோக நிகழ்ச்சியில் மேற்படி நிறுவனத்தினால் ஒலிப்பதிவு

செய்யப்பட்ட சுவாமிகளின் சமயவாழ்க்கை என்ற சொற்பொழிவு நாடா வெளியிடப்பட்டது. அவ் ஒலிநாடா தீர்ந்தமையால் மறுவெளியீடு செய்யப்பட்டது. சைவத்தமிழ் மக்களின் வீடுகளில் இருக்க வேண்டிய ஒலி நாடாவாகும். திருவண்ணாமலை யோகி யோகி ராம் சுரத்குமார் என்ற ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளினால் எழுதிய நூலும் 2001ம் ஆண்டு வைகாசி விசாகத்தில் அன்று வெளியிடப்பட்டது. கவிஞர் கந்தவனம் அவர்கள் எழுதிய புதிய சைவவினாவிடை இரண்டாம் புத்தகமும், நல்லூர் நாற்பது என்ற யாழ்ப்பாணம் நல்லூர் முருகனைப் பற்றிய கவிதை நூலும் வெளியிடப்பட்டன. நல்லூர் நாற்பதை மலேசியக் கவிஞர் திரு. தெ.மு. இளம்வழுதி அவர்களும் புதிய சைவவினாவிடை இரண்டாம் புத்தகத்தை தமிழ்நாட்டைச் சேர்ந்த சைவப்பெரியார் சித்தாந்தரத்தினம் திரு. இ. செல்லையா அவர்களும் வெளியிட்டு வைத்தனர். முதற் பிரதியை சைவத் தமிழ் ஆர்வலர் நியூதேவி கேற்றரிங் உரிமையாளர் திரு. தவச்செல்வம் அவர்கள் பெற்றுக்கொண்டார். சித்தாந்தரத்தினம் செல்லையா அவர்கள் எங்கள் வெளியீடான புதிய சைவவினாவிடையை இந்தியாவில் வெளியீடும் உரிமையை இந்துசமயப் பேரவையினரிடம் பெற்றுச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. 2001ம் ஆண்டு பேரவையினர் நடத்திய திருமுறை முற்றோதலிலும் இங்கு தங்கியிருந்த காலத்தில் இவர் கிரமமாகப் பங்குபற்றி வந்தார்.

2001ம் கந்தசஷ்டி காலத்தில் ஆறுநாட்களும் கந்தசஷ்டி கவசத்தில் உள்ள ஆறுகவசங்களையும் பஜனை முறையில் இந்துசமயப் பேரவைச் சிவனடியார் கூட்டத்தினரால் அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் பாராயணம் செய்யப்பட்டது. அத்துடன் திருமுறை பஜனையும் நடத்தப்பட்டது. மேற்படி ஆலயத்தில் இந்து சமயப் பேரவையினரால் கந்தசஷ்டி காலத்தில் ஆறுநாட்களும் சமயச்சொற்பொழிவும் நடத்தப்பட்டது. 2001ம் ஆண்டு கந்தசஷ்டியைத் தொடர்ந்து வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் திருமுறைப் பஜனை நடத்தப்பட்டு வருகின்றது.

2001ம் ஆண்டு நாவலர் குருபூசையின் பொழுது சைவப்பெரியார் வி. கந்தவனம் அவர்கள் பேசிய சொற்பொழிவு ஒளியிழை நாடாவாக வெளியிடப்பட்டது. 2001ம் ஆண்டு

திருவெம்பாவை காலத்தில் 10 நாட்களும் திருவாசகம் முற்றோதல் நடத்தப்பட்டு திருவாதிரை நாளன்று திருவாசக விழா நடத்தப்பட்டது. பங்கு பற்றிய சிவனடியார் திருக்கூட்டத்தினருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நாவலர் குருபூசையைத் தொடர்ந்து சைவசமயப் பக்தி இலக்கியத்தின் கருவூலமாகிய பெரியபுராணத்தொடர் சொற்பொழிவை இந்துசமயப் பேரவையின் சார்பில் நிகழ்த்தும்படி சைவப்பெரியார் கவிஞர் வி. கந்தவனம் அவர்களைக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் சொற்பொழிவு ஆரம்பமாகியது. வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் 63 நாயன்மார்கள் 9 தொகை அடியார்களின் வாழ்க்கை வரலாறுகளை மிக இலகுவான சொற்பிரயோகங்களுடன் இலக்கியச்சுவையுடன் பெரியார் அவர்கள் சொற்பொழிவாற்றி வந்தார்.

2001 தொடக்கம் 2003 ஆண்டு வரை Keele / Sheppard அருகில் சைவத் தமிழ் ஆர்வலர் ஒருவரின் வீட்டில் பேரவையின் சிவனடியார் திருக்கூட்டத்தைச் சேர்ந்த ஆசிரியையான திருமதி. தங்கமுத்து தம்பித்துரையும், Pharmacy / Lawrence அருகில் பேரவையின் சிவனடியார் திருக்கூட்டத்தைச் சேர்ந்த ஆசிரியையான திருமதி சின்னராசா இராசமலர் அவர்களும் பேரவையின் சார்பில் சமய வகுப்புகளை நடத்தினர்.

2002ம் ஆண்டு தைமாதம் சுவாமி சதானந்தர் அவர்களின் நற்போதனை என்ற புத்தகம் அவருடைய வருடாந்த குருபூசையை முன்னிட்டு ஸ்காபரோ சிவன் ஆலயத்தில் பேரவையினரால் வெளியிடப்பட்டது. இந்நூலை தொகுத்தவர் சுவாமிகளின் பேரனாகிய சபா சிவானந்தன் ஆவார். மாதந்தோறும் வேதாந்த ஞானமன்றத்தில் திருவாசகம் முற்றோதல் சிவ முத்துலிங்கத்தின் ஒருங்கிணைப்பில் இந்து சமயப் பேரவை சிவனடியார் திருக்கூட்டத்தினரால் நடத்தப்பட்டது. வேதாந்த ஞானமன்றம் ஸ்காபரோ பெரிய சிவன் ஆலயத்தை அமைத்த பின்பும் 2003 செப்ரெம்பர் மாதம் வரை சிவனடியார் திருக்கூட்டத்தினரால் மாதந்தோறும் திருவாசகம் முற்றோதல் மேற்படி ஆலயத்தில் நடத்தப்பட்டது.

ரொறன்ரோ மேற்கில் அமைந்துள்ள சிவா விஷ்ணு

ஆலயத்தில் ஆலயம் ஆரம்பித்த காலம் தொடக்கம் திருவாசகம் முற்றோதல் ஒன்றரை வருட காலமாக நடத்தப்பட்டது. தொடர்ந்து பேரவையின் சிவனடியார் திருக்கூட்டத்தினரின் ஒரு பகுதியினர் அவ் ஆலயத்தில் மாதத்தில் ஒருநாள் முற்றோதல் நடத்தி வருகின்றனர்.

2002ம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் பன்னிருதிருமுறை முற்றோதல் நடத்தப்பட்டன. 2002ம் ஆண்டு ஐப்பசி மாதம் பன்னிருதிருமுறை முற்றோதல் பூர்த்திவிழா நடத்தப்பட்டது அன்றையதினம் பேரவையின் தாபகர் ஆத்மீகவள்ளல் ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் எழுதி ஏற்கனவே நாவலப்பிட்டியில் வெளியிடப்பட்ட 'கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம்' என்ற நூல் வெளியிடப்பட்டது. வழமைபோல முருகன் புத்தகசாலை அதிபர் திரு.க. மகேசன் அவர்கள் திருமுறை முற்றோதிய சிவனடியார் திருக்கூட்டத்தினருக்கு சுவாமி சித்பவானந்தர் உரை எழுதிய திருவாசகப் புத்தகத்தை பரிசில்களாக வழங்கினார். முற்றோதலில் பங்குபற்றிய சிவனடியார்களுக்கு இந்து சமயப் பேரவையினரால் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. புலம்பெயர்ந்து தமிழர்கள் வாழும் நாடுகளில் தமிழ்ச் சிறார்களுக்கு மத்தியில் திருமுறைகள் பரப்பப்பட வேண்டுமென ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் கட்டளையை சிரமேற்கொண்டு சிறார்களுக்கிடையில் திருமுறை மனனப் போட்டி நடத்தப்பட்டது. மேற்படி போட்டியில் 141 பிள்ளைகள் பங்குபற்றினார்கள். அவர்களுக்கும் க. மகேசன் வெற்றிக் கிண்ணங்களையும் ஆறுதல் பரிசுகளையும் வழங்கினார். வழமைபோல் செல்லத்தம்பி மார்க்கண்டு அவர்கள் வெளியிட்டநூலின் முதற்பிரதியை பெற்றுக்கொண்டார். 2001ம் ஆண்டைப்போல கந்தசஷ்டி காலத்தில் ஆறுகவச பாராயணமும், திருமுறைப் பசனையும் நடத்தப்பட்டன. ஆறுநாட்களும் சமயப் பிரசங்கங்களும் நடத்தப்பட்டன. திருவெம்பாவை காலத்தில் மேற்படி ஆலயத்தில் 10 நாட்களும் திருவாசகம் முற்றோதல் நடத்தப்பட்டு திருவாதிரை நாளன்று அபிசேக ஆராதனைகளுடன் திருவாசக விழா நடத்தப்பட்டது. பங்குபற்றிய சிவனடியார் திருக்கூட்டத்தினருக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

கவிஞர் கந்தவனம் அவர்களுக்கு அமெரிக்க உலக பல்கலைக் கழகத்தினால் கிடைத்த கலாநிதி பட்டத்திற்காக 2002 யூன் மாதம் அவரைப் பாராட்டியும், அவர் செய்யும் சமயப்பணிகளைக் கௌரவித்தும் இந்து சமயப் பேரவை, சிவதொண்டன் நிலையம், உலகச்சைவப்பேரவை (கனடாக்கிளை) ஆகியன இணைந்து பாராட்டுவிழா ஒன்றை அருள்மிகு நல்லூர் முருகன் கோயில் மண்டபத்தில் நடத்தினர். அவருடைய சேவை நலம் பாராட்டி 'அறிவுமதி' என்ற விழாமலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. பெரியார் எழுதிய 'கந்தன் கதை' என்ற கந்தபுராண நூலும் வெளியிடப்பட்டது. பேரறிஞர் முருகவே பரமநாதன் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்ற விழாவில் விழாநாயகன் அவர்களின் சைவப்பணியை கௌரவித்து **'சைவதுரந்தரர்'** என்னும் பட்டமும் ஆழ்கடலான் முருகவே பரமநாதன் அவர்களால் சூட்டிக் கௌரவிக்கப்பட்டது. சைவதுரந்தரர் என்ற சிறப்புப்பட்டம் இந்துசமயப் பேரவை, சிவதொண்டன் நிலையம் உலகசைவப் பேரவை (கனடாக்கிளை) ஆகிய முப்பெரும் சங்கங்களால் இணைந்து வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

2002ம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் மே மாதம 3ம் திகதி வரை நடத்தப்பட்ட திருப்புகழ் முற்றோதல் (அருணகிரிநாதர் பாடல்கள்) பூர்த்தி விழா 03-05-2002 இல் வெகுவிமரிசையாக அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் நடத்தப்பட்டது. அபிசேக ஆராதனைகளும் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன. திருவாவடுதுறை ஆதீன வெளியீடான 'விதியை வெல்வது எப்படி?' என்ற நூல் மறுவெளியீடாக இந்து சமயப் பேரவையால் வெளியிடப்பட்டது. இந்நூல் திருவாவடுதுறை ஆதீனச் சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையத்தின் இயக்குநர் சித்தாந்த வித்தியாசாகரம் திரு. கு. வைத்தியநாதன் அவர்களினால் எழுதப்பட்டதாகும். புதிய சைவவினாவிடை முதலாம் புத்தகமும் மறுபதிப்பாக வெளியிடப்பட்டது.

2002ம் ஆண்டில் அருள்மிகு நல்லூர் முருகன் ஆலய மகோற்சவத்தை ஒட்டி ஒரு வெள்ளிக்கிழமையில் சைவதுரந்தரர் வி. கந்தவனம் நிகழ்த்திய சொற்பொழிவை தமிழ் முருகன் என்ற பெயருடன் ஒலியிழை நாடாவாக வெளியிடப்பட்டது.

2003ம் ஆண்டு தை மாதம் திருநாவுக்கரசு நாயனாரின் ஆறாம் திருமுறையில் இடம்பெறும் திருத்தாண்டகம் முற்றோதப்பட்டது. படிப்பவர்களை சிவனோடு ஐக்கியமாக்கும் திருத்தாண்டகம், உணர்ந்து படிப்பவர்களுக்கும், கேட்பவர்களுக்கும் பேரின்பத்தைக் கொடுப்பதாகும். வழமைபோல தமிழ் வருடத்தைத் தொடர்ந்து சனிக்கிழமைகளில் திருமுறை முற்றோதல் ஆரம்பமாகி வாரந்தோறும் சனிக்கிழமைகளில் அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் நடைபெற்றது. ஒன்றரை வருடமாக சைவதுரந்தரர் கந்தவனம் அவர்கள் நிகழ்த்திய பெரியபுராண தொடர் சொற்பொழிவை முன்னிட்டு செப்ரெம்பர் 5ம் 6ம் திகதிகளில் சேக்கிழார் விழா நடத்துவதெனவும் சேக்கிழார் விழாவைத் தொடர்ந்து செப்ரம்பர் 20ம்திகதி திருமுறைப் பூர்த்திவிழாவும் நடத்துவதெனவும் மேற்படி விழாக்களுக்கு சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் அவர்களை சிறப்புச் சொற்பொழிவாளராக வரவழைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

2003 ஏப்ரல் மாதம் புதிய நிர்வாகத்தில் பேரவையின் ஆரம்பத் தலைவரான ந. பரராசசிங்கம் தலைவராகவும், கா. கனகரத்தினம் உபதலைவராகவும், ச. திருநடராசா பொதுச் செயலாளராகவும், சிவ முத்துலிங்கம் உதவிச் செயலாளராகவும், செ. சோமசுந்தரம் பொருளாளராகவும், க. வித்தியானந்தன் உதவிப் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். காப்பாளர்களாக வி. கந்தவனம், ஆ. வேலுப்பிள்ளை, சாமி அப்பாத்துரை, க. தனபாலசிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். புதிய நிர்வாகத்தின் ஆலோசனையின்படி மேற்படி விழாக்கள் நடத்தப்பட்டன. பெரியபுராணத்திலும், திருமுறைகளிலும் திருமந்திரத்திலும் பாண்டித்தியம் உள்ள சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் அவர்களின் வருகையினால் மேற்படி விழாக்கள் சிறப்படைந்தன.

2003 செப்ரெம்பர் 5ம்திகதி சேக்கிழார் விழாவில் பேரவையின் சார்பில் அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் திருமுறைப் பாராயணத்துடன் அபிசேக ஆராதனை நடத்தப்பட்டது. சைவதுரந்தரர் வி. கந்தவனம் அவர்கள் சேக்கிழாராக உருவகப்படுத்தப்பட்டு பெரியபுராண நூலை சுமந்து வீதி சுற்றி மேடைக்கு அழைத்து வரப்பட்டார்.

விழாவிற்கு பேரவையின் பொருளாளர் திரு. செ. சோமசுந்தரம் ஆசிரியர் அவர்கள் தலைமை தாங்கினார். ஆலய பிரதமகுருவும் வித்துவான் கு.விமகாலிங்கமும் ஆசியுரை வழங்கினர். பிரதம விருந்தினராக வருகை தந்திருந்த வடபிராந்திய இந்துகலாச்சார உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கமும் சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்த முன்னாள் பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியன் அவர்களும் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். சைவதுரந்தரர் கந்தவனம் அவர்கள் பதிலுரை வழங்கினார். உதவிச் செயலாளர் சிவ முத்துலிங்கத்தின் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவேறியது.

செப்ரெம்பர் 6ம்திகதி சேக்கிழார் விழாவிற்கு கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் தலைமை தாங்கினார். அவுஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்த சோமஸ்கந்தக் குருக்கள், வரசித்திவிநாயகர் கோயில் பிரதமகுரு விஜயகுமாரக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்கினர். சட்டத்தரணி சிவசிறிதரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். சேக்கிழார் விழாவிற்காக நடத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் முதற்பரிசு பெற்ற சிறார்களின் பேச்சுக்களும் இடம்பெற்றன. பேரறிஞர் முருகவே பரமநாதனின் தலைமையின்கீழ் பெரியபுராணம் பற்றிய கருத்துக்களமும் இடம்பெற்றது. கலாநிதி பாலசுந்தரம், ஆசிரியர் செ. சத்தியமூர்த்தி சைவசித்தாந்த மன்றத்தலைவர் திரு தி. விசுவலிங்கம் ஆகியோர் கருத்துக்களத்தில் பங்குபற்றி தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர். நடனநிகழ்ச்சியும் ஆசிரியை நவராஜகுலசிங்கம் முத்துக்குமாரசுவாமியின் மாணவர்களின் பண்ணிசை நிகழ்ச்சியும் இடம்பெற்றன. சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம், முன்னாள் யாழ் பல்கலைக்கழக சிறப்புப் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன. இருநாட்களும் சிறப்புச் சொற்பொழிவுகள் மக்களின் பேராதரவைப் பெற்றன. சைவதுரந்தரர் வி. கந்தவனம் எழுதிய குருவழிபாடு என்ற நூலும், முருகப் பெருமானும் அவ்வையாரும், விநாயகப் பெருமானும் அகத்தியரும் என்ற சிறுவர் இலக்கியங்களும் வெளியிடப்பட்டன. குருவழிபாடு என்ற நூலை ஆசிரியை மீனா தவரத்தினமும், சிறுவர் இலக்கியங்களை ஆசிரியை கோதை அமுதனும் வெளியிட்டு வைத்தார்கள். வழமைபோல்

பெரியார் செல்லத்தம்பி மார்க்கண்டு அவர்கள் முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டார். பேச்சுப்போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு பிரதம விருந்தினர் வெற்றிக்கேடயங்களையும், சான்றிதழ்களையும் வழங்கினார்.

2003 செப்ரெம்பர் 20ம் திகதி நடைபெற்ற பன்னிருதிருமுறைப் பூர்த்திவிழா விசேஷ அபிசேக ஆராதனைகளுடனும் திருமுறைகள் வீதியுலாவுடனும் ஆரம்பமாகியது. பேரவையின் காப்பாளர் வி. கந்தவனம் அவர்கள் தலைமை வகித்தார். மேற்படி விழாவில் முற்றோதலில் கலந்து கொண்ட சிவனடியார்களுக்கு அர்த்தமுள்ள இந்துமதம் 10 பாகங்களையும் முருகன் புத்தகசாலை அதிபர் திரு. க. மகேசன் அவர்கள் பரிசில்களாக வழங்கினார். திருமுறை மனனப்போட்டியில் பங்குபற்றிய 150க்கு மேற்பட்ட சிறார்களுக்கும் வெற்றிக் கிண்ணங்களையும் ஆறுதல் பரிசில்களையும் வழங்கினார். திருமுறை முற்றோதலில் தொடர்ந்து பங்குபற்றிய 70க்கு மேற்பட்ட சிவனடியார்களில் வயது முதிர்ந்த தாயாரும் வயது முதிர்ந்த பெரியவரும் இந்துசமயப் பேரவை நிர்வாகிகளால் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து நான்கு வருடமாக இந்து சமயப் பேரவை நடவடிக்கைகளுக்கு தார்மீக ஆதரவுதரும் முருகன் புத்தகசாலை அதிபர் திரு க. மகேசன் அவர்களுக்கு '**தார்மீக வள்ளல்**' என்னும் பட்டமும் பிரதம விருந்தினர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் அவர்களுக்கு '**செஞ்சொற்செல்வர்**' என்னும் பட்டமும் பேரவையின் காப்பாளர் திரு வி. கந்தவனம் அவர்களால் சூட்டப்பட்டன.

முழுநாள் விழாவாக நடைபெற்ற மேற்படி விழாவில் ஆலய பிரதமகுரு ஸ்ரீலஸ்ரீ பாலதிருக்குணானந்தக் குருக்கள் பிரதமவிருந்தினர் சிவமகாலிங்கம் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி பட்டுக்கிரீடம் சூட்டிக் கௌரவித்தார். புலம்பெயர்ந்து எமது தமிழ் மக்கள் கூடுதலாக வாழும் கனடாவில் திருமுறைக்கு இது ஒரு எழுச்சிவிழா என விழாவிற்கு வருகைதந்திருந்த யாவரும் பேசிக்கொண்டனர்.

27-09-2003 தொடக்கம் 02-11-2003 வரை அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் திருப்புகழ் முற்றோதல் (அருணகிரிநாதர் பாடல்கள்) நடைபெற்றது. இறுதிநாள் அபிசேக ஆராதனைகளுடன் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.

2001, 2002, 2003, 2004 ஆகிய நான்கு ஆண்டுகளிலும் பேரவையின் ஒருங்கிணைப்பில் கந்தபுராணச் சுருக்கப் புராணபடனம் அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் நிகழ்த்தப்பட்டது. பௌராணிகர்கள் சி. முத்துத்தம்பி, கு.வி. மகலிங்கம் டாக்டர் வீ. சண்முகம் ஆகியோர் படனவுரை நிகழ்த்தினர். வைகாசி விசாகத் தினத்தன்று புராணபடன பூர்த்திவிழாக்கள் நடத்தப்பட்டன. பூர்த்திவிழாவில் பௌராணிகர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

1996ஆம் ஆண்டு தொடக்கம் வைகாசி விசாகத்தில் வரும் ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் ஜெயந்திவிழா கொண்டாடப்பட்டு அவருடைய ஞாபகார்த்தமாக இஷ்டதெய்வ நாமஜெபப் போட்டி சிறார்களுக்கிடையில் நடத்திப் பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிவநந்தி அடிகள், புங்குடுதீவு சரவணை முத்துச்சுவாமி, காவாய் சுப்பிரமுனியசுவாமி, சைவசித்தாந்தச் செம்மல் பண்டிதர் மு. கந்தையா ஆகியோரின் மறைவு குறித்து பேரவையினரால் அஞ்சலிக் கூட்டங்களும் நடத்தப்பட்டன.

குமரி ஆனந்தன், பிரபல எழுத்தாளர் சோமகாந்தன் தம்பதிகள், சைவசித்தாந்த கலாநிதி கணேசலிங்கம் ஆகியோரின் சிறப்புப் பேருரைகளும் பேரவையினரின் ஒருங்கிணைப்பில் நடத்தப்பட்டன.

பேரவையின் உறுப்பினர்களில் ஒருவரும், ஆத்மஜோதி சுவாமிகளை தன் ஞானகுருவாக வரித்துக்கொண்ட சிவமயச்செல்வி அன்னை சரவணைமுத்து பரமேஸ்வரி அவர்களின் 'யாத்திரை அனுபவம்' என்ற நூல் பேரவையின் வெளியீடாக சிதம்பரம் ஆயிரம்கால் மண்டபத்தில் வெளியிடப்பட்டது. இந்நூல் வெளியீடு பேரவையின் உதவிச் செயலாளர் சிவ.முத்துலிங்கத்தின் ஒருங்கிணைப்பில் இந்திய திருத்தல யாத்திரை சென்ற சிவனடியார் திருக்கூட்டத்தினருக்கு முன்பு நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

1999ம் ஆண்டு மாசி மாதம் தொடக்கம் ஆத்மஜோதி சுவாமிகள் மறைந்த சதய நட்சத்திர திதியில் பேரவையின் உதவிச் செயலாளர் சிவ முத்துலிங்கம் அவர்களின் வீட்டில் குருவழிபாடும் பசனையும் மாதந்தோறும் நடைபெற்றுவருகின்றது. சிவனடியார் திருக்கூட்டத்தினரில் ஒரு சிலரும் பேரவையின்

நிர்வாகிகளில் ஒரு சிலரும் பங்குபற்றி ஆத்மஜோதி சுவாமிகளின் நல் ஆசிகளைப் பெறுகிறார்கள்.

வீட்டு வழிபாடுகள் கூட்டு வழிபாடுகளை மக்களுக்கு மத்தியில் பரப்ப வேண்டுமென்ற பேரவையின் தாபகர் ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் கட்டளைக்கு இணங்க எங்களை அழைக்கும் வீடுகளில் கூட்டுவழிபாடுகளை (கூட்டுப் பிரார்த்தனையை) நடத்தி வருகின்றோம். கடந்த நான்கு வருடமாக ஜனவரி முதலாம் திகதி சபாரத்தினம் சௌந்தரராஜனின் இல்லத்தில் திருவாசகம் முற்றோதல் சிவ முத்துலிங்கத்தின் ஒருங்கிணைப்பில் பேரவையின் சார்பில் திருக்கூட்டத்தினரால் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

2003ஆம் ஆண்டு சிவனடியார் திருக்கூட்டத்தைச் சேர்ந்த வே. இ. இராசையாவின் 30ஆவது பிறந்த நாள் விழாவும், 2004ஆம் ஆண்டு சிவனடியார் திருக்கூட்டத்தைச் சேர்ந்த சபாரத்தினம் ஸ்ரீரங்கநாயகி தம்பதிகளின் 50ஆவது திருமண விழாவும் பேரறிஞர் முருகவே பரமநாதன் அவர்களின் 80ஆவது பிறந்தநாள் விழாவும் கொண்டாடப்பட்டன.

## நன்றியுரை

கடந்த 10 ஆண்டு காலமாக பல சிரமங்களுக்கு மத்தியில் இந்து சமயப் பேரவை செயற்படுத்திய செயல்திட்டங்கள் அனைத்துக்கும் சகல ஒத்துழைப்பும் நல்கிய சைவத்தமிழ் ஆர்வலர்களுக்கும், நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு இடம் தந்து உதவிய மேற்குறிப்பிட்ட ஆலயங்களுக்கும், நிதி உதவி நல்கிய வர்த்தகப் பெருமக்களுக்கும் 10 வருட காலமாக வாரி வழங்கி நற்பணிகள் செய்வதற்கு பொருளுதவி புரிந்த பொதுமக்களுக்கும் ஆத்மஜோதி பத்திரிகைக்கு விளம்பரம் தந்து உதவிய வர்த்தக நிறுவனங்களுக்கும் பேரவையினரின் மனமார்ந்த நன்றிகள்.

எங்கள் வெளியீடுகளான நூல்களை வாங்கி உதவி புரிந்த தமிழ் மக்களுக்கும், அதை மக்கள் மயப்படுத்திய சிவனடியார் திருக்கூட்டத்தினருக்கும் தனது வயது முதிர்ந்த நிலையிலும் நூல் விற்பனையை உன்னத பணியாகக் கருதி மக்கள் மயப்படுத்தும் பெரியவர் த. கு. சபாரத்தினம் அவர்களுக்கும் மற்றும் ஆர்வலர்களுக்கும் தொண்டர்களுக்கும்

பல வருடமாக எமது நூல்களை அச்சிட்டு அளப்பரிய ஆன்மீக சேவை செய்யும் விவேகா அச்சகத்தினருக்கும், மனம் கோணாமல் சமயப் பணி எனக் கருதி வடிவமைப்புச் செய்து தரும் திரு. மா. கனகசபாபதி அவர்களுக்கும் பேரவையினரின் உள்ளம் கனிந்த நன்றிகள்.

1998ம் ஆண்டு தொடக்கம் பேரவையின் சகல நடவடிக்கைகளிலும் தங்கள் பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் நல்கி அரும் பெரும் சமயப் பணியாற்றுவதற்கு வழிசமைக்கும், பேரவையின் ஒரு அங்கமான சிவனடியார் திருக்கூட்டத்தினருக்கும் எங்கள் நன்றிகள். ஆரம்ப காலத்தில் பேரவை வெளியிட்ட நூல்களின் முதற் பிரதிகளை வாங்கி உதவிய பெரியார் திரு. ஆ. வேலுப்பிள்ளை அவர்களுக்கும், மேற்குறிப்பிட்ட முதற் பிரதிகளை வாங்கிய மற்றைய பெரியோர்களுக்கும் சிறப்புப் பிரதிகளை வாங்கி ஒத்துழைப்பு நல்கிய தமிழ் நெஞ்சங்களுக்கும் எங்கள் நன்றிகள்.

நாவலர் பெருமானின் உருவச் சிலைக்கும் அவரின் 125வது குருபூசையை முன்னிட்டு நடைபெறும் விழாக்களுக்கும் ஒத்துழைப்புத் தரும் பக்தி நிறைந்த அன்பு நெஞ்சங்களுக்கும் எங்கள் நன்றிகள்.

**ஒரு சகாப்த காலத்தைப் பூர்த்தி செய்து சைவத் தமிழ் மக்களின் பெரும் ஆதரவினால் நிமிர்ந்து நிற்கும் ஒன்ராறியோ இந்து சமயப் பேரவைக்கு பெரும் ஆதரவைத் தந்து, நிலைநிறுத்தி, பெரும் விருட்சமாக வேரூன்ற வைப்பது எமது மக்களின் கடமையாகும். மக்கள் சேவை செய்யும் ஒரு நிறுவனத்தின் வளர்ச்சி அதைச் சார்ந்து நிற்கும் மக்களிலேயே தங்கியுள்ளது.**

சகல வழிகளிலும் பேரவையின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து மக்களுக்கும், எல்லாம் வல்ல சிவபெருமானின் அருட்கடாட்சமும் இகபர சுகங்களை நல்கும் முருகப் பெருமானின் திருவருளும், ஞானதபோதனர் பேரவையின் தாபகர் ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் நல் ஆசிகளும் கிடைப்பதாகுக!

வாழ்க தமிழ்! வளர்க சைவம்! ஓங்குக எமது தமிழர் பண்பாடு!

சைவம் வாழ்ந்தால் தமிழ் மொழி வளரும்.
தமிழ் மொழி வளர்ந்தால் சைவம் வாழும்.

இந்து சமயப் பேரவை செயற்குழு சார்பில்
உதவிச் செயலாளர்
சிவ. முத்துலிங்கம்
(மேற்படி அறிக்கை செயற்குழு
நிர்வாகசபை உறுப்பினர்களின் அங்கீகாரம் பெற்றது)

## ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை செயற்குழு உத்தியோகத்தர்கள்

காப்பாளர்கள்: திரு. வி. கந்தவனம்
திரு. சாமி அப்பாத்துரை
திரு. ஆ. வேலுப்பிள்ளை
திரு. க. தனபாலசிங்கம்

| | |
|---|---|
| தலைவர்: | திரு. ந. பரராஜசிங்கம் |
| உப தலைவர் : | திரு. கா. கனகரத்தினம் |
| பொதுச் செயலாளர்: | திரு. ச. திருநடராசா |
| உதவிச் செயலாளர்: | சிவ. முத்துலிங்கம் |
| பொருளாளர்: | செ. சோமசுந்தரம் |
| உப பொருளாளர்: | க. வித்தியானந்தன் |

# ஒன்ராறியோ இந்து சமயப் பேரவையின் ஆயுட்கால அங்கத்தவர்கள்

1. திரு. விநாயகர் கந்தவனம்
2. திரு. நவரத்தினம் பரராஜசிங்கம்
3. திரு. செல்லத்துரை சோமசுந்தரம்
4. திரு. கா. கனகரத்தினம்
5. திரு. சங்கரப்பிள்ளை திருநடராசா
6. திரு. சிவ. முத்துலிங்கம்
7. திரு. கணபதிப்பிள்ளை வித்தியானந்தன்
8. திருமதி இராசமலர் சின்னராசா
9. திருமதி மகேஸ்வரி வியாகரத்தினம்
10. திரு. செல்லத்தம்பி மார்க்கண்டு
11. திருமதி அன்னபூரணம் கார்த்திகேசு
12. திருமதி புனிதவதி சிவசுப்பிரமணியம்
13. திரு. பொன்னுச்சுவாமி யோகானந்தம்
14. திருமதி தேவமலர் நாகராசா
15. திரு. ஞானசுப்பிரமணியம் புவனேந்திரன்
16. திருமதி பரமேஸ்வரி பரமநாதன்
17. திருமதி இராசமலர் முத்தையா
18. திரு. செ. பொன்னம்பலம்
19. திரு. பெரியதம்பி விக்கினேஸ்வரன்
20. திருமதி பரமேஸ்வரி சரவணமுத்து
21. திரு. கதிரித்தம்பி அம்பலவாணர்
22. திரு. கனகசபை கந்தையா
23. திரு. குமாரவேலு சபாரத்தினம்
24. திருமதி அன்னபூரணம் ஞானசம்பந்தர்
25. திருமதி சற்குணதேவி பஞ்சலிங்கம்
26. திருமதி கமலாதேவி மகாலிங்கம்
27. திருமதி இராசலட்சுமி சண்முகலிங்கம்
28. திரு. இராசையா சிவஞானசுந்தரம்
29. திருமதி காந்திமலர் பரஞ்சோதி
30. திருமதி தர்மதேவி சிறிசுப்பிரமணியம்

31. திருமதி செல்லமுத்து சின்னத்துரை
32. திருமதி நாகேஸ்வரி கணேஸ்
33. திரு. வே. இ. இராசையா
34. திருமதி நாகலோசினி நாகலிங்கம்
35. திரு. காசிப்பிள்ளை கோபாலபிள்ளை
36. திருமதி பொற்கொடி கந்தசாமி
37. திரு. மருதையினார் சிவசாமி
38. திரு. கு. வி. மகாலிங்கம்